ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்
திங்கள் தோறும் வெளிவருவது.

சிலம்பு ௨.	மெய்கண்டான் ஆண்டு-எாக புரட்டாசித் திங்கள் 1924௵ செப்டம்பர்—அக்டோபர்௴	பரல் ௬.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தர் தேவாரம்
இயற்கைப்பொரு ளழகு

(௲௨௫-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்திரட்டில் இதுவரை கூறியுள்ள பகுதிகளின் வைத்து இயற்கைப் பொருள் நயத்தின் விரிவாராய்ச்சி பின் விரிவாகச் செய்யப்படும். இப்போது இப்பகுதியோடு இத்திரட்டு முடிவுறும். ஐம்புலனிற்கும் இனிமை பயக்கத்தக்க இயற்கைப் பொருள்களைப் புனைந்துரைத்தலும் பல்வகை நிலப்பொருள்களைப் பகுத்தும் இணைத்தும் நயம்பெறக் கூறுதலும் பொருள்களின்

வெளிக் காட்சியின்பாற்படும். வெளித்தோன்றும் பொருள்களை மக்களுடைய வளர்ச்சியோடும், அறிவோடும் இணைத்து அவை களிலே தம் பண்பின் போலிகளைக் கண்டு களிக்கும் காட்சி உட்காட்சி அல்லது அகக்காட்சி என்று பொருள்படும். முன்னது பாமரர்க்கும் பின்னது பாவலர்க்கும் மிகுந்த இனிமைபயக்கும்.

இருவகையாகவும் இயற்பொருள் நயம் விளக்கிய நமதா சிரியர் இயற்கை உலகத்தினை இறைவனது திருவருட் செயற் றிறன் பலப்பல வகையாக விளங்குதற்குரிய இடமாகவே பல இடங்களிற் குறித்துள்ளார்.

எழுவகைப் பிறப்பெடுத் துழலும் உயிர்கள் யாவும் இன் புறுவதும் துன்புறுவதும் இறைவனது திருவருட் செயலே. பல்வகை உயிர்களும் இறைவனை வழிபடுதற்குரியன என்பதே பல இடத்தும் காணப்படுகின்றது

"மந்தி யேறியினமாய் மலர்கள் பலகொண்டு
முந்திவந்து வணங்குங் கோயின்"

"பகரத்தாராவன்னம் பகன்றில் பணிந்தேத்த"

என்பதனால் அது விளங்கும்.

நமதாசிரியர் தேவாரத் திருப்பாட்டுக்களில் மிகுதியும் இயற்கை நயங்களையே எடுத்துக் கூறுவதால் பயன் இன்ன தென்று சிலர் கருதுதல் கூடும். உலகத்தை நோக்குமிடத்துத் திருவருள்பெற்ற பெரியோர் ஒருவகை யாகவும் ஏனையோர் பிறிதொரு வகையாகவும் அதனைக் காண்பர்.

'மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்"
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதம்"

என்றவாறு எங்கும் பரமெனக் காணும் பெரியார் எல்லாம் இறை வனது திருவருள் விலாசமாகக் காண்பர். 'நின்னுவார் பிற ரன்றி நீயே யானாய்' என்பதும் அது. தத்துவங்கள் யாவற்றை

யுங் கடந்து நின்ற கடவுளுடைய திருவருளினால் "உணர் வினோர் பெற வரும் சிவபோகத்தை யொளிவின்றி யுருவின்க, ணணையுமைம்பொறி யளவினு மெளிவரவருளினை யெனப்போற்றி" என்ற வண்ணம் ஐம்பொறியுணர்வினும் சிவபோகந் துய்க்கவல்ல திருஞான சம்பந்தப் பெருமான் இயற்கைப்பொருள் எவற்றையும் தமக்குத் திருமுலைப் பால் அளித்துச் சிவஞானம் தந்த திருவருட் பெருஞ் சத்தியின் அளப்பருங் காட்சி யாகவே கண்டனர். தில்லையின் கண் ஊனக் கண்ணிற்குப் புலனாகும் பொன்னம்பலத்தையும் இறைவரது திருக் கூத்துவடித்தையும் முறையே தாம் பெற்ற மெய்ஞ்ஞானமாகவும் அம்மெய்ஞ்ஞான நிறைவின் பயனாக எழுந்த வரம்பிலின்பமாகவும் கண்டனர் என்பது,

"அண்ணலார் தமக்களித்த மெய்ஞ்ஞானமே யானவம்பலமுந்த
முண்ணிறைந்த ஞானத்தெழு மானந்தவொரு பெருந்தனிக் கூத்துங்
கண்ணின் முன்புறக் கண்டு கும்பிட்டெழுங்களிப் பொடுங் கடற்காழிப்
புண்ணியக் கொழுந்தனையவர் போற்றுவார் புனிதராடிய பொற்பு"

(பெரியபுராணம்)

என்று ஆசிரியர் சேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்தருளினமையால் நன்கு விளங்கும்.

'ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன்' "கழுமலை முதுபதிக் கவுணிய னறியுமனைய தன்மையை" என்றுங் கூறிய வாற்றால் ஆசிரியரது அளவில் பேரறிவு இனிது விளங்கும்.

"உமையலா துருவமில்லை உலகலா துடையதில்லை" என்று கூறியவண்ணம் உலகமெல்லாம் இறைவன் உடைமையென்றும், உலகத்தைப் படைத்துக் காத்தழிக்கும் திருவருளே இறைவனது உருவமென்றும் கொள்ளுமிடத்து 'எவ்வுயிரும் பராபரன் சந்நிதியாகவும் இலங்குமுயிருடலனைத்தும் ஈசன் கோயிலாகவும்' அமைதல் பற்றி நமதாசிரியர் திருவாய் மலர்ந்தருளிய இயற் பொருட்கட்டுரை யாவும் எம்பிரானாரது ஞானத் திருக் கோயில் சீர்விளக்கும் புகழுரையேயா மென்க

படைப்பு அனைத்தும் திருவருள் விளைவே.

"போற்றிநின் கருணை வெள்ளப் புதுமதுப் புவனநீர்தீக்
காற்றிய மானன் வானமிரு சுடர்க்கடவுளானே"

'போற்றியிப் புவனநீர் தீக்காலொடு வானமாகுய்
போற்றி யெவ்வுயிர்க்குந் தோற்றமாகி நீ தோற்றமில்லாய்
போற்றி யெல்லா வுயிர்க்கு மீறு யீறின்மையாகுய்
போற்றி யைம்புலன்க ணின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே"

(திருவாசகம்).

முற்றிற்று

கா. சுப்பிரமணியப் பிள்ளை M. A., M. L.

காழித்தேவாரச் சிறப்பு

(௩௫௪-ம் பக்கத்தொடர்ச்சி)

அன்றியும், பிரமாணத்தின் பயனுவது சிவஞான கலைக்குப் புறத்தும் அகத்தும் உளவாய ஆதார உரிமைபற்றி நிகழும் தெளிவும் கூடலுமாம். சைவ வித்தைக்குரிய இப்பயனது நோக்கம் சிவஞான கலையாவது திருத்தேவாரமே என்றும், அத்தேவாரத்தின் உபதேசகலை அதனுள்ளேயே அடங்கியதென்றும், இத் தமிழ்வேதமொழி எம்பெருமானது திருவார்த்தை யென்றும், திருவார்த்தைகளைக்கொண்டே உபதேச கலையைத் தந்திர மந்திரகலைகளோடு திருக்கூட்டத்தைச் சேர்ந்து திருமுறை ஓதுவா ரனைவரும் உள்ளன்போடு பயிலுதல்வேண்டும் என்றும் உள்ளவாறு கண்டு தெளிதலே. திருத்தேவாரங்கள் இறைவன் உண்ணின்று உணர்த்திய உண்மை வாசகங்கள் என்பதையும், அவ்வாசகங்கள் தாமே அவை இறைவன் திருவருள் பெற்ற மூர்த்திகளாகிய சிவஞானச் செல்வர்கள் மூலம் வெளிவந்தன என்று விளக்குகின்றமையால் அவை இறைவனது திருஞான சம்பந்தம் பெற்றுப் பூத பரம்பரையினர் பொலிய விளக்குந் தன்மை உள்ளனவென்பதையும், இவற்றை உண்ணின் றுணர்த்திய இறைவனுக்கும் இவற்றை ஆன்ம வர்க்கத்தினர் உள்ளத்

தும் புறத்தும் வெளிநின் றுணர்த்திவரும் உண்மை நாயன் மார்களுக்கும் உள்ள உரிமை இறைவனுக்கும் இறைவனது திருவருட்சத்திக்கும் அவரது திருக்குமாரர்களுக்கும் இடைப் பட்ட ஒற்றுமைபோல்வ தாதலின், இவ்விரு தன்மைகளில் ஒவ் வொன்றற்கு முரிய சிற்சில அம்சங்களை யாம் பிரித்துக் காட்டக் கூடியதாயினும், அவ்விரு தன்மைகளும் பிரித்தற்கியலாவென் பதையும், உண்மை நாயன்மார்களைத் திருவவதாரம் செய்வித்து அவர்களைத் தனது திருவருள் வெளிப்பாட்டிற்குத் தக்க ஆசா ரியாராகக்கொண்டு இவ்வண்ணம் திருவருளை எம்போன்றார்க்கு வெளியிட்டருளுவது அத்தனிப்பெருங் கருணையே என்பதை யும், இவ்வவதாரங்கள் ஓர் அவதரத்து ஓர் பொருட்டாகத் தோன்றிய சில அவதாரங்கள் போலன்றி, எக்காலத்தும் யாவர்க் கும் சைவார்த்தத்தைத் தெளிவிக்கும் யதார்த்தாவதாரங்களா தலின், இம்மூர்த்திகள் சமயாசாரியர்கள் ஆயினர் என்பதையும் தெளிந்துணர்வர். திருமறைகள் இறைவன் திருவார்த்தை என் பதனை யாவரும் ஒப்புக்கொள்வர். இந்நவீன காலத்துச் சிற்சில சான்றோர் இவை மனிதவாக்கென்று எண்ணலாயினர். ஆயி னும் பற்பல சான்றோர் வேதாகமங்களைப்போன்றே திராவிட சுருதிகளையும் இறைவன் திருவாக்கென்று உணர்ந்து, இவ் வுண்மை வாக்குகளுக்கு இயல்பான உண்மை அருத்தத்தைக் கிரமத்திற் கேட்டுணர்ந்து, ஏழு திருமுறைகளையும் ஒவ்வொன் றின் திருப்பதிகங்களோடும் மற்றைத் திருமுறைகளோடும் மெய்கண்ட சாத்திரங்களோடும் பண்டார சாத்திரங்களோடும் முரணுவாறு உண்மைப் பொருளைத் தேர்ந்து பேரன்போடு உண்மை ஞானத்திற் றலைப்படுவர்.

இங்ஙனம் உண்மைப் பொருளைத் தேடுங்கால், பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களின் இலக்கணங்களையும் உள்ள வாறு ஐயந்திரிபறக் கண்டு, புறச்சமயக் கோட்பாட்டாலும் நவீன தத்துவ விசாரணையாலும் மயங்காமல், உண்மையாகிய ஞான விசாரத்திற்கு உண்மையான திருமுறைகளே ஏற்ற செய்கையும் கருவியும் ஆவனவென்று கடைப்பிடித்தல் வேண் டும்.

இரண்டாவது இலக்கணவியல். இதனுள் ஒரு வகையிற் காரணமும் அடங்கும். இவ்வியலுள் விசாரிக்கப்படுவன பதி பசுக்களின் இயலும், பதிப்பொருளின் இலக்கணமும், கேவல சகல சுத்தாவத்தைகளின் தன்மையும், சிருட்டியாதி பஞ்ச கிருத்தியங்களும், பாசத்தின் இயல்பும் ஆகும். இறைவன் உளன் என்பதற்குப் பிரமாணம் சுருதி ஸ்மிருதிகளை உணர்ந்த அன்பர்களுக்கு ஆவசியகமன்று. எனினும் அந்நூல்கள் தாமும் பல பக்குவர்க்கும் பதிப்பொருளைப்பற்றிப் பலவாறு கூறுதலின், பதிப்பொருளின் பதார்த்த லட்சணத்தை உள்ளவாறு பிரமாணம் லட்சணங்களோடு விசாரிப்பதற்குச் சைவ சுருதிகள் இன்றியமையாதன. அவையும் உத்தம பக்குவர்க்கு, காரணானுமானம் விசாரணானுமானம் அந்தக்கரணானுமானம் மார்க்கானுமானம் சன்மார்க்கானுமானம் யதார்த்தானுமானம் முதலிய நவீன தார்க்கிகர் சொல்லும் பிரமாணங்களுக்கும், பிராசீன தார்க்கிகர்கள் சொல்லும் அஷ்டவிதப் பிரமாணங்களுக்கும் மேலாகச் சைவப் பிரமாணங்களைக் கூறும். அவை திருவருட் பிரமாண மொன்றேயாகித் திருவருள் விளக்கத்தால் "பெம்மானிவனன்றே" எனத் திட்டமாய் அளவும் இயலும் அறிந்து உரைத்தற்கியலும்.

சிவபெருமான் பரதந்திரப்படாமல் சுதந்தரனாய் எல்லாவற்றிற்குங் காரணனாய்ச் சுயம்புவாகிய தற்பரனாம்; "பெம்மானிவன்", இவனையன்றிச் சுயம்பு பிறர் இலர். "பெம்மானிவனன்றே" அவன் ஏகன், இறைவன்; தோடுடைய செவியன் முதலிய திவ்ய லக்ஷணங்களை யுடையவன். அவ்விலக்கணங்கள் தாமும் அவனின் என்றும் நீங்காத அடையாளங்களாய் அவனது எண்குணங்களையும் விளக்கி ஆன்மாக்கள்மாட்டுச் செறிந்த கள்வன் என்பதனையும் குறித்து அவன் தடத்த சொரூப லட்சணங்களை இனிதின் உணர்த்தும். அன்னோன் அம்மையோடு என்றும் பிரியாத அப்பன் அவன் திருக்குமாரருக்கு அவராகியே தோன்றி, என்றும் போலவே அன்றும் இன்றும் பணிந்தேத்த வருள் செய்பவன். இங்ஙனமாக இறைவனது இயலையும்

இறைவியது பெருமையையும் ஆசாரியனது இலக்கியத்தையும் ஒன்றுபடக் கற்பிப்பதே இவ்வியலின் நோக்கம். இவ்வாறு தெய்வத்திருமுறை முற்றிலும் பதிப்பொருளின் தடத்த சொரூப லட்சணங்களைக் கண்டு கொள்வர்.

இனிப் பிரமாணத்திற் சாதனம் லௌகிக ஆராய்ச்சிக்கு அவசியமானது. அம்மட்டுமோ அதன்மேலும் உண்மை ஆராய்ச்சிக்கும் அவசியமானது. பாசக்கட்டால் அவனியிற் பிறந்து அலைந்து திரியும் ஆன்மாக்கள் அவ்வவனியின் தோற்றமுதல் யாவற்றையும் ஓர்ந்து, அவ்வவனித் தத்துவமுதல் அனைத்தாய தத்துவங்களும் அழிந்தொடுங்குங்காலத்து அதீதனாய் அம்மையோடப்பனாய் அழகிய திருத்தோணியின்கண் அமர்ந்தருளும் பீடுடையான். சமஸ்த வேதங்களுக்குந் தலைவனாய், பிரமனும் பிராமணர்களும் பூஜிக்க உலகத்தோற்றத்திற்கு முன்னும் ஒருவனாய், உலகவொடுக்கத்திற்குப் பின்னும் ஒருவனாய், காயச்சிறைக் கலத்தினின்று நம்மை முத்தி நெடுங்கரை சேர்ப்பிக்கும் பெம்மான், “ பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மான் இவனன்றே ” என்றும் கண்டுணர்வர்.

இனி இவ்வியலிற்றானே ஆன்மாக்களின் தடத்த சொரூப லட்சணங்களையும் மூவகையார் உயிர்வர்க்கத்தையும் அவை தொழிற்படுமாற்றையும் அவற்றின் தோற்ற வகைகளையும் பந்தம் வீடு என்னும் நிலையையும் ஐவகைப் பாசங்களின் தடத்த சொரூப லட்சணங்களையும் அவை சகஜமாயும் கந்துகமாயும் கூடிய கூட்டத்தையும் அவை கழிக்கக் கழியும் ஆற்றினையும் அறிதற்கியலும். அவ்வாறறிவிப்பவன் நாம் “ ஏத்தஅருள் செய்த பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே ”

காரணத்தின் பயன் பிரபஞ்ச சோதனை அதனால் ஆன்மாக்கள் சுத்தாத்துவித நிலைபெறுவன. இதில், அனுக்கிரகிக்கும் முறையும் பாசக்கேடும் வீடுபேறும் சிந்திக்கப்படும். பாசத்தால் விளையும் தீமையும் அவை கழன்றார் பெறும் நன்மையும் அவை கழலுமாறு இறைவன் அருள் செய்யப்புகும் ஆதிமாண்

பும் இவ்வியலுள் கண்டுதெளிவர். இங்ஙனம் தெளிவிப்பான் "ஏடுடைய மலரான் முனநாள் பணிந்தேத்த வருள் செய்த பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே". இனிச் சாதனவியல்.

சாதனமாவது: பொதுவதிகாரத்துக் கூறிய முப்பொருள்களுள், மேற்கூறப்படும் பயன் பெறுதற்பொருட்டுச் சாதித்தற்குரிய ஆன்மாக்களின் இயல்பும் சாதனமும் முறையும் திருத்தேவார நூலுடையார் அனுக்கிரகத்தால் ஆவது என்பதே. இது பொது வகையாலும், சிறப்புவகையால் அந்நூலுடையாரது ஆசாரியத்துவத்தாலும், அவருடைய கிரியையாலும், அற்புதத்தாலும், இவ்வியலுட் பிரமாணம் காரணம் சாதனம் பயன் என்னப்படும். சாதனத்திற் பிரமாணம் பொதுவகையாற் கருதுமிடத்து நம்பேராசிரியர்கள் திருவவதாரமே. பாசவசத்தால் பந்திக்கப்பட்ட உயிர் தானே திருவருளை நாடவும் அப்பாசத்தைச் சேதிக்கவும் இயலாமையின், இதனை நல்வழிப்படுத்த இன்னோர் திருவவதாரம் செய்தனர். சாதனத்திற் காரணம் ஆசாரியத்துவம். உயிர் பக்குவமுற்றபோது அதனை உய்வித்தற்குநம் பெருந்திறலடிகள் இந்நிலவுலகத்து ஆசாரியர்களாகத் தாமே எழுந்தருளினர். அவர்களது தரிசனமும் அனுக்கிரகமும் தோன்றும் நிலைமையும் பாசவிமோசனத்திற்கு இன்றியமையாதவை. ஆதலின் அன்னோரைப் பற்றிய இந்த ஸ்திதிகளை இவ்வியலிற் காரணமாக்கினம்.

சாதனத்திற் சாதனமாவது அம்மூர்த்திகளது திருவருட்கிரியை. இக்கிரியைகளைத் திருத்தேவாரங்களானும் திருத்தொண்டர் புராணத்தானும், வடமொழி இதிகாசத்தானும், புராணங்களானும் அறிகின்றோம். இக்கிரியைகள் அவர்களது அருள் நிலைமையை நமக்குத் தெளிவித்து உள்ளத்தின் ஆராய்ச்சி செய்விப்பதற்குத் தக்கன.

சாதனத்தின் பயன் அவர்கள் அற்புதச் செயல்களாலவன. கல்லை மென்கனி ஆக்குவிப்பதுபோலும், ஆண்பனையைப் பெண்

பனையாக்கு விப்பதுபோலும் எலும்பைப் பெண்ணாக்கி வைப்பது போலும் அன்றோ அசேதனப்பட்டுக் கிடந்த நம்மனோரைச் சேதனராக்குவிப்பது. இங்ஙனம் ஆக்குவிப்பது அவர்களுடைய தெய்வத் திருவாக்கு. இதுவே பயனளிப்பது.

இனிப் பயனியல்; அச்சாதனத்தால் உண்டாகும் பயனையும் அவையாவன பாசவீடு சிவப்பேறு ஜீவன்முத்திநிலை ஆகிய மூன்றனையும் திருத்தேவாரங்கள் உள்ளவாறு பெறுவித்தல். இவற்றை, இம்மை மறுமைகளிற் பயன் கூறி அவற்றைக் களைந்து, பின்னர் இத்திருநூல் பெறுவிக்கும், இவ்வியலும் வேதங்களுட் கூறிய பொதுவகை இன்பங்களையும், ஆகமங்களின் விதந் தோதிய திருவருளின்பத்தையும், திருவருட்சத்தியினது பெருவலியையும், சித்தாந்த முடிவிற்கண்ட பேரின்பத்தையும் பற்றி நான்கதிகாரங்களாகப் பகுத்து, திருத்தேவாரத் திருமுறைகள் வாயிலாகச் சைவத்திருநெறித் தலைவர்கள் காழிவலம்புரி மண்டபத்தே திருக்கூட்டத்திற்சேர்ந்து ஓதுபவர்க்கு உணர்த்திவந்தார்கள் என்பது யாம் கர்ணபரம்பரையிற் கேட்டுவருவது. சாத்திரவாயிலாக உணரப்படும் சைவார்த்தங்களைத் தோத்திர வாயிலாக விளக்குங்கால் சிற்சில அதிகார இயல்களைச் சிறிது முன்பின் கூறுமுறையையும், பொது வியல்பு பிரமாணம் இலக்கணம் என்னும் இரண்டியல்களாற் கூறப்பட்டுக் கேட்டல் சிந்தித்தல் என்னும், இருதிறத்தால் உணரப்படும் என்பதனோடும், சிறப்பியல்பு சாதனம் பயன் என்னும் இரண்டியல்களாற் கூறப்பட்டுக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை என்னும் நான்கு திறத்தால் உணரப்படும் என்பதனோடும் இந்நெறி முரணுமையையும், பொதுவினும் சிறப்பினும் கூறவேண்டிய தடத்த சொரூப லட்சணங்களை மாணாக்கர்க்கு எளிதின் உணர்த்துதற்பொருட்டு ஆங்காங்கு வகுத்தமைத்துக் கூறுதல் மரபு வழுவன்று. ஆமாற்றையும், கற்றல், கேட்டல் சிந்தித்தல்களின்கண்ணே தெளிதல் நிட்டை சாதித்தல்களையும் ஒரோவழிச் சேர்த்துக்கூறுதல் கற்றலோடு அமையாது அதன்மேலும் மனவெழுச்சி மாணவர்க்குக் கூடுதற்பொருட்டு என்பதனையும்

கருதி இந்தப்பிரகாரம் சைவார்த்த நிர்ணயத்தை, ஆராய்ச்சி அநுபூதி ஞானங்களால், கழுமலப்பதியிற் பெரியோர் போதித்து வந்தனர். இங்ஙனம் பெரியார் திருமுறைகளை ஓதுவித்தற்குக் காரணமாவான் "கற்றல் கேட்டலுடையார் பெரியார் கழல் கையாற்றொழுதேத்தப் பெற்ற சூர்ந்த பிரமாபுரமேவிய பெம் மானிவனன்றே."

(தொடரும்)

P. A. முத்துத்தாண்டவராய முதலியார், சீர்காழி.

'மெய்ந் நெறி'

என்னும்

குட்டிக் குறள்

காப்பு

மெய்ந் நெறி யெழுதற்
கைங் கரன் றுணைவன்.

வாழ்த்து

உலகுக் கெல்லாம் ஒருபொருள் முதலே.
கற்றதன் பயநங் கடவுளைத் தொழுதல்.
நெஞ்சமூர் வாற்றொழி னீடுவாழ் குவரே.
அவற்பதஞ் சாரி னவப்பிறப் பறுமே.
௫. இருபதம் புகழின் வரும்வினை யொழிவ.
செந்நெறி நின்றார் மெய்ந்நிலை நின்றார்.
ஒருவன தடியார் அருமனங் கவலார்.
பிறவாழி நீந்தற் கறவாழி தாள்சேர்.
தலைவனை வணங்காத் தலைதலை யலவே.
௰. இறைவனைச் சேரார் பிறவியுட் சோர்வார்.

வான்

வானே யுலகிற் றானே யமுதம்.
உணுத்தந் துணவா வுறுவதும் வானே.

வானில் லாயின் யாநில் லும்மே ?
மழையின் றாயின் உழுவா ருழல்வார்.
காப்பது மழிப்பதுங் கனமழை செயலே.
விசும்பிற் றுளியேற் பசும்புற் றளிரும்.
நெடுமழை யின்றேற் கடல்சுவ றுவதே.
வானவர் பூசனை வானமுண் டேற்றான்.
தருமமுந் தவமும் வருமழை யானே.
மழையா லுலகம் ஒழுக்கமு மழையால்.

துறவு

நூலெலாந் தலைமையி னுவலுவ துறவே.
துறந்தார் பெருமை யிறந்தாரி னதிகம்.
இருமைக் கணாரும் பெருமையர் துறவோர்.
பொறிபுலன் செலுத்தா வறிவன்மே னிலத்தான்.
ஐந்தவித் தார்க்கு இந்திரன் சிறுவன்.
மனிதரிற் பெரியோர் மாட்சியிற் புரிவோர்.
ஐம்பூத வுணர்வினன் றன்பால துலகு.
முனிவரர் பெருமை மறைமொழி காட்டும்.
குணமலை வெகுளி கணமு நில்லாது.
அந்தண ரென்போர் செந்நெறி யாளர்.

அறன்

கதிநிதி யறத்திற் பெரிதெதோ வுயிர்க்கு ?
தருமமே யாக்கங் கருமமே நீக்கம்.
ஏன்றள வீதல் சான்றவர் கடமை.
மன மாசி னீகை தவநாச மாகை.
அழுக்கா றாதிய விழுக்கல தறமே.
நாளையென் னாவறம் வேளையி லுதவும்.
எடுப்பவ ரூர்பவர்க் கிடையதே தருமம்.
அறப்பய னாற்றிற் பிறப்பறுக் கும்மே.
அறப்பொரு ளின்பம் புறப்பயன் றுன்பம்.
அறிவுளார் விருப்ப மறன்பிறி தவமே.

இல்லம்

ஏனைமூ வர்க்கு மில்லறத் தான்றுணை.
துறந்தவர் வறியா ரிறந்தார்க்கு மவனே.
பிதிரிறை புதியோ ரினந் தமேனும் பறலே.
பழியஞ்சும் பாத்தூண் வழியெஞ்ச லில்லை.
௪௫. அன்பற னுளதேற் பண்புடைத் தில்லம்.
அறவழி யில்லந் துறவினுட் பெரிது.
தரும வில்லாளி யருந்தவ மீளி.
நோற்பித்து நோற்கு நோன்மைய தில்லம்.
பழியொரீஇ யறத்திற் பட்டதே வாழ்க்கை.
௫௦. நன்னெறி வாழ்க்கையன் முன்னிடுந் தெய்வம்.

(தொடரும்)

சுகவனம்-சிவப்பிரகாசன்,
காவேரிப்பட்டணம்.

முற்காலமுந் தற்காலமும்

(௩௨அ-ம் பக்கத் தொடர்ச்சி)

பள்ளிச்சிறார் கல்வி பயிலச் செல்லுங்கால் முகங்கோணி வெறுப்புடன் போவதும், பொழுது போவதற்குமுன் கல்விச் சாலையைவிட்டு நீங்கும் பிள்ளைகள் அகமலர்ந்து குதித்தோடுவதும் பெரும்பாலும் நமது பார்வையிற்படுங் காட்சிகளிலொன்று. சிறுவர்கள் தமது பள்ளி வாழ்க்கையை விரும்புவோரல்லர். ஆறும் வகுப்பிற் படிக்குஞ் சிறுவனுக்குத்தான் கற்குங் கல்வியும் படும்பாடும் மிகக் கடினமாய்த் தோன்றுகின்றன. அவ்வகுப்பைக் கடந்து அவன் மேலே செல்வானாயின் சென்ற ஆண்டில் அவன் உழைத்த உழைப்பு வெகு எளிதாகி விடுகின்றது; ஏழாம் வகுப்பின் வேலையோ இரவும் பகலும் அவனை வருத்துகின்றது. இளமையின் சிறப்பையும் அருமையையும் இளையோர் அறியார். உயர்பதவியி லமர்ந்து பெருந்தொகை ஈட்டும் பெரியோரைப்

பார்த்து மாணவர் தாமும் அவரைப்போ லாகவேண்டுமென்று முயல்கின்றனர். சிறுவர்க்கு எதிர்நோக்கும் முயற்சியு மில்லாவிடின் அவர் மேன்மை யடைவதெங்ஙனம்? ஆனால் மாணவனாயிருந்து தேர்ச்சியடைந்து, செய்தொழிலிற் சிறப்புற்றுப் பொருள் தேடி யதன் பயனெய்தி மூப்படைந்த ஒருவன் தன் இறுதிநாளில் தன் வாழ்க்கையைப்பற்றி நினைக்கப் புகுந்தால், கற்புடைய மனைவியை மணந்து மகிழ்ந்து மக்களைப்பெற்றதையும், வருந்தி யுழைத்துச் செல்வந்திரட்டி அறஞ்செய்ததையும் வாழ்க்கையில் வரும் இன்னல்களைக் கண்டு நகைத்துத் தனதாற்றலால் இடையூறுகளை மேற்கொண்டதையும் பெரிதாகப் பேசாது யாதொரு கவலையுமின்றிக் கண்டவற்றையுந் தின்று கண்களில் நீர் பெருகச் சிரித்து விளையாடித் திரிந்த கல்லாவிளமையே உவப்புடன் நினைந்து விரித்துரைக்கின்றான்.

"இனிநினைந் திரக்கமா கின்று திணிமணற்
செய்யுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடும மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையென வறியா மாயமி லாயமொ
டுயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்த
நீர்நணிப் படுகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்து மணற்கொண் டகல்லா விளமை
யளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெரு மூதாளரே மாகிய வெமக்கே" (புறம். உசங)

மேற்காட்டிய மனநிகழ்ச்சி ஒரு மகன் முதுமையடைந்த பின்னரே நிகழ்கின்றது. முதுமையி லிளமையை நினைந்திரங்குவது மக்கள் பண்பென்பது நாம் மேற்கோளாய்க் காட்டிய செய்யுளால் நன்குணரப்படும். பிறப்பு, வளர்ச்சி, மூப்பு என்பன ஒரு

மகனின் வாழ்க்கைக்கேயன்றி ஒரு ஜனசமூகத்தின் வரலாற்றிற்கு மடுத்தவையாதலின், ஆயுள் நீட்சியையுடைய ஒரு ஜனசமூகம் தனது பிள்ளைப்பருவத்தையே வியந்து போற்றி மகிழுமென்பது வெளிப்படை. இக்காலத்திற் பேராற்றலுடன் பெரும் புகழுடைய சில மேல்நாட்டினரைவிட இந்தியர்களாகிய நாம் மிகப் புராதனமானவர்களானமையின் அவர்களைவிட நாம் அதிகமாய் நமதிளமையைப்பற்றி நினைக்கின்றோம். அவர்களின்னும் வயோதிப நிலையை யடையாததால் கல்விபயில் மாணவர் போல் எதிர்நோக்குடையராய் ஊக்கம் நிறைந்திலங்குகின்றனர். நாமோ பின்னோக்குடன் இறந்த நமது இளம்பருவத்தை எண்ணி இரங்குகின்றோம். இன்னுஞ் சில நூற்றாண்டுகளிலவர்களும் நம்மைப்போலாயினுமாவர்.

விரிசடைக்கடவுள் கயல்விழிக்காரிகையை மணந்தவந்நாள் தேவரும் பிறரு மத்திருக்கோலத்தைக் கண்ணுறும் வண்ணமொருங்கே திரண்டு கைலையைச்சேர, வடபால் தாழ்ந்து தென்பாலுயர்ந்த தெனவும், அதுகண்ட ஒளிதிகழ் அழற்கணன் மகத்துவமிருந்த வகத்தியரை யழைத்து "தென்பாலேகி வையகத்தைச் சரிநிலைக்குக் கொணர்க" எனக் கட்டளையிட்டனரெனவும் அவ்வாணையைச் சிரமேற்கொண்ட குறுமுனி தென்றிசையடைந்து அமரர்கள் வாழ்த்துங் குமரனையடுத்துத் தமிழையோதினரெனவும் புராணங்கூறும். மேற்காட்டியதில் தென்றிசை யென்பது தமிழ்நாட்டையும், வடதிசையென்பது ஆரியர் தேசத்தையுங் குறிப்பதாகக் கொண்டால், அக்காலத்தில் தமிழ் நாடு பலவற்றிலும் பலவாற்றானுஞ் சிறந்து விளங்கியதாலது உயர்ந்தது என்று பொருள் கொள்வது சிறிது இசையும்; இது எங்ஙனமாயினும், இக்காலத்தில் மேற்றிசையுயர்ந்து கீழ்த்திசை தாழ்ந்திருப்பது நிச்சயம், புனற்போக்கால் நிலக்கிடக்கையை எளிதிலறிந்து, வைகை, காவேரி முதலிய ஆறுகள் கிளம்புந் திசைக்குக் கிழக்கு (கீழ்-தாழ்ந்த) என்றும் பண்டைத் தமிழர் பெயரிட்டனர்.

"செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை
காணிற் கிழக்காந் தலை"

என்னுங் குறளில் கிழக்கு என்பதற்கு அப்பொருள் வந்தமை காண்க. நிலத்தின் ஏற்றத் தாழ்ச்சியை யொட்டிப்பிறந்த இத் திசைப்பெயர்கள் இப்பொழுது வேறு புதுப்பொருள் கொண்டு வழங்கவுங்கூடும். ஐரோப்பியரையும் பிறரையும் நாம் மேல் நாட்டார் என்றழைக்கும் போது நம்மினுமவர் உயர்ந்தவரென்று சொல்லாமற் சொன்னது போலிருக்கிறது. கீழ் நாட்டின ரென்று அவர்கள் நம்மைப்பற்றிப் பேசுங்கால் நம்மில் ஏதோ தாழ்வுண்டென்று கருதியங்ஙனஞ் சொல்வதுபோ லிருக்கிறது. என்னே! இவ்விபரீதம்! ஞாயிறு படுந் திசையிலுள்ளோர் எழும்பியதும், ஞாயிறு எழுந் திசையிலுள்ளோர் படுத்ததும் வியப் பென்பதில் ஐயமுண்டோ? ஆயினும், உலகம் உருண்டையாயிருப் பதால் நேர்மேற்காய்ச் செல்லு மொருவன் இறுதியிற் கிழக்கு முகமாய்த் திரும்பவேண்டியதவசியம். ஆதலின், இந்தியா, சீனு, பாரசீகம் எகிப்து முதலிய நாடுகளிலிருந்து மேற்கே சென்ற செல்வமு மதிகாரமும் மறுபடியும் புறப்பட்ட விடத்திற்கே வந்து சேருமென்று நம்பி எதிர் பார்த்தல் நன்று. முற்காலத்திற் கிழக்கு உயர்ந்திருந்ததினுலுந் தற்காலத்திற் மேற்கு அங்கிலையி லிருப்பதாலும் இவற்றை இங்கெடுத்துக்கூற இடமுண்டா யிற்று.

தென்மொழியிலும் வடமொழியிலுமுள்ள தொன்னூல்களைக் கற்கப்புகுவோ ரெவரேயாயினு மவர் பண்டைக்கால ஒழுக் கத்தி னுயர்வையுங் குடிமுறைச் சிறப்பையும் அரசியலேற் றத்தையுங் கல்வியறிவின் நுட்பத்தையும் ஏத்திப் பேசாதிரார். நமது நாட்டையும் நாட்டினரையும் பற்றி நல்லெண்ண மில்லாத வரும் பழைய நமது நூல்களைச் சற்று உற்றுநோக்கியபின் வேறு வகையாய் நினைப்பார்க ளென்பதிற் சந்தேகமில்லை. அவர் களிற் சிலர் நமது பழமையைக் குறைக்க முயன்றாலும் நமது நாகரீகத்தையும் நல்லொழுக்கத்தையுங் குறித்து இழுக்குரை யார். பண்டைநாட் சிறப்பைப் பற்றிப் பேசுங்கால் அந்நாள் இந் நாளுடன் ஒரு சிறிது மியைபில்லாத காலமெனச் சிலர் கொளி னும், ஆராய்ச்சியுடையார் அங்ஙனந் துணியார். பூமுற்றினுற் கா

யும் காய்முதிர்ந்தாற் கனியுமாவது போன்று, எதிர்காலம் நிகழ் காலமாகி, நிகழ்காலம் இறந்தகாலமாகும். நாளையென்பதின்றாகி இன்றென்பது நெருநலாய் மாறுவதை யுணர்ந்தார் யாரே முற் காலந் தற்காலத்தினின்று முற்றும் வேறுபட்டதென்றுரைப்பார்? ஆகலின் மிகப்பழைய தொன்னாளும் ஒருகாலத்து நிகழ்காலமா யிருந்திருக்க வேண்டுமென்பதை உளத்திற்பதித்து இக்காலமும் விரைவில் முற்காலமாகு மென்பதை ஞாபகத்தில் வைக்கவேண் டும். இவ்வாறு நாம் நினையாமற்போவதால் வரும்பிழைகள் பல. கனியைக்கண்டு அதன் இனிமையை நுகர்ந்து உவப்படையு மொருவன் அது காயாயிருந்த பருவத்தில் இனிமை குன்றியிருந் திருக்கு மென்பதை மறத்தலும் காயைப்பார்த்து அதன் உவர்ப் பையோ புளிப்பையோ எண்ணி வெறுப்படையு மொருவன் அது கனியாயின் இனிக்கு மென்பதை மறத்தலுமாகிய இரண்டுந் தவறே. நூறு ஆண்டுகட்கு முன்னிருந்தவர் தமக்கு நிகழ்காலமாகிய அக்காலமதற்கு முன்னுள்ள காலத்தைவிடத் தீமை மலிந்திருந்த காலமென அபிப்பிராயப்பட்டன ரென்ப தற்குச் சான்றுண்டு. இப்பொழுது எழுபது வயதுடையவரா யிருக்கு மொரு முதியோரை எடுத்துக்கொள்வோம். அவர் இக்காலத்து வாலிபரின் கல்வியறிவுகளைப்பற்றிச் சொல்வது யாது? "எங்கள் நாளில் நாங்கள் திடகாத்திரராய் அரிய பல காரியங்கள் செய்தோம்; இக்காலத்து மக்கள் ஆறுமாதம் மருந் துண்டு பத்திய மிருந்தவர்போல் தெரிகின்றார்; நாங்கள் கற்ற கல்விக்கு, இவர்கள் கற்பது எந்த மூலைக்கு? இவையனைய பல வார்த்தைகள் நமது செவியிற் சாதாரணமாய்ப்படுவன. ஆனால், கவனிக்கவேண்டிய தின்றொன்றுண்டு; இக்காலத்து இளையோர் இன்னும் எழுபது வருஷங்களுக்குப்பின் வேறு சிறுவர்களை நோக்கி இத்தகைய சொற்களையே வழங்குவார்கள். எனது தகப்பனார் என்னைப் பற்றிப் பேசியவாறே அவருடைய தகப் பனாரும் அவரைப்பற்றிப் பேசியிருப்பார்.

(தொடரும்)

க. ப. சந்தோஷம், B.A., L.T.,

பழந்தமிழ்

(ஆராய்ச்சிக்குரியது)

காலஞ் சென்ற மொழிநூற் பெரும்புலவர் மாகறல், கார்த்திகேய முதலியாரவர்கள் எழுதிவைத்திருந்த குறிப்பிலிருந்து எடுத்தது.

"அகர முதல எழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

உலகம் முதல் முதல் குழந்தைப் பருவமாக இருந்த காலத்து, அம்முதன் மக்கள் ஊமைகள் போலத் தத்தங் கருத்துக்களைக் கைக்குறிகளால் அறிவித்தும் அவ்வாறே பிறர் கருத்துக்களை அறிந்தும் வாழ்ந்து கொண்டு வந்தார்கள். அதோடு கட்குறியும் பொருட்குறியும் சேர்ந்து அப்பாழை பெருகியது. இவ்வாறு கைக்குறியாலும் கட்குறியாலும் பொருட்குறியாலும் நெடிது காலம் கழிந்தபின் குறிஞ்சி முதலியவற்றிலுள்ள அவ்வந்நிலத்துப் பறவைகளும் வண்டினங்களும் விடியற்காலத்து இனிது பாடுவதியற்கை யாதலாலும் கீதத்தில் எல்லாவுயிர்களுக்கும் இயல்பாக விருப்பமுண்டாகின்றபடியாலும் அம்மக்கள் தாமும் அங்ஙனமே மெல்ல மெல்லப் பாடிப்பாடி நாவினது ஆற்றல் மிகமிக ஒவ்வோர்கால் ஒவ்வோர் ஒலிவடிவுண்டாயது. இவ்வொலி வடிவுகள், மார்பு கழுத்து முதலிய இடத்தாலும் உதடு நாக்கு முதலியவற்றின் முயற்சியாலும் வேறுபடுகின்றமையின் அதுவழியாகவே அக்காலத்துப் பெரியோர்கள் உலகத்தியற்கை யெழுத்தோசையையும் இயற்கைப் பொருளோசையையும் உலகத்தியற்கை வடிவையும் நுணுகி ஆராய்ந்து மெல்ல மெல்ல நீரினிகழ்ச்சியைத் தம்வழியே திருப்புவதுபோல அம்முதன்மக்கள் நாவினிகழ்ச்சியை அவ்வியற்கை இலக்கணத்தின் படியே திருப்பிக்கொண்டே வந்தனர். இவ்வாறு திருப்பிக் கொண்டு வந்தமையால் உளதாயசொற்கூட்டம் முதல் இயற்கையுச்சரிப்பும் பிறகு அவ்வியற்கையினின் றுண்டாய செயற்கையுச்சரிப்புமுடைய சொற்கூட்டமாயிற்று. இச்சொற்கூட்டத்துக்

குப் பலகாரணம் பற்றித் தமிழெனப்பட்டது. இத்தமிழ் இப்போழ்துள்ள செந்தமிழை நோக்கப் பழந் தமிழாகின்றது.

பாழை

பாழை—மொழி, அதாவது பாஷை. சித்தர்கள் பரிபாழையென்பர். பாழி பாழையாயிற்று. பாழி=முனிவர்வாசம். முனிவர் குழாத்தினின்றுண்டாய தென்பது பொருள். முனிவர் வாசமாவது மணிமலையிலுள்ள குகை. பாழியென்பது முதல் முனிவர் வாசத்தையும் பிறகு தேவர் கோயிலையு முணர்த்தி நிற்கும்.

"பித்தர் கோயிலாழைப் பெரும் பாழியே"

பாழி—பாழை, இகரம் ஐகாரமாயிற்று. முசலி முதலையென்பது போல.

தமிழ்

தமிழென்பது இனிமை மிக்க பாழைக்காயிற்று; பண்பாகு பெயர். "தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் சிந்தாமணிச் செய்யுளுக்கு நச்சினார்க்கினியர் இனிமை தழுவிய சாயலவரென்றலின் தமிழென்னுஞ் சொல்லுக்கு இனிமை யென்னும் பொருளுண்மை பெற்றும். இனிமையாவது யாழிசைக்கொப்ப இயற்கை யோசை யுடைமை. தமிழில் வல்லோசையும் மெல்லோசையும் இடைப்பட்ட ஓசையும் சிறந்திருத்தலின் அம்மூவினத்தால் தமிழெனப்பட்டதெனலுமாம்.

த — வல்லினம்
மி — மெல்லினம்
ழ் — இடையினம்

தமிழில் பெரும்பான்மையும் இயற்கைச் சொற்களும் சிறுபான்மை செயற்கைச் சொற்களும் இருக்கின்றமையின் அவ்விலக்கணமும் அமையத் தமிழெனப் பட்டதெனலுமாம்.

த, மி—இயற்கையெழுத்து உ.
ழ்-செயற்கையெழுத்து க.

தமிழில் ஓரசைச் சொற்கள் மிகுதிப்பட்டிருத்தலின் ஓரசையில் தமிழெனப்பட்ட தெனலுமாம். விரிக்கிற் பெருகும். இது பொருந்தக் கூறலென்னும் உத்தியாம். தமிழ் சூரியன் காரியமாகிய சுல்லென்னும் இயற்கை முதனிலையினின்று உண்டாவதாய் சௌரமான மொழியாய் சூரியமத்திய சித்தாந்தத்திற்கு உரியதாய் சூரியனுக்குப் பன்னிரண்டு கலைபோலப் பன்னிரண்டு உயிருடையதாய் சூரியன்போல் ஆண்பாலதாய் கோள்களின் நடுவில் சூரியன் போல ஏனைய நாடுகளின் நடுவிலுள்ளதாய் இருத்தலினும் வித்தை யென்பது காண்டலளவையினின்று பெருகுகின்றமையின் அக்காண்டலளவை சூரியனாலன்றி யுண்டாகாமையானும் இனிமையை யுணர்த்தும் தாமமென்பது தமில் தமிள் தமிழ் எனத்திரிந்து அப்பொருளை யுணர்த்தல் போலச் சூரியனை யுணர்த்தும் தாமமென்பது தமில் தமிள் தமிழெனத் திரிந்து சூரியனாலாகிய பாஷையை யுணர்த்திற்று. காட்சி யென்பது முதல் காண்டலையும் பிறகு காண்டலாலாகிய அறிவையும் உணர்த்தி நிற்கும்.

தாமம் = சூரியன்

தாம—தெர்மா = வெப்பம் சூரியனிடத்துள்ளது

தெர்மாமெட்டர் = வெப்பத்தினளவைக்காட்டும் ஓர் கருவி

விச்சாதிபதி சூரியனேயாகலின் தமிழ் தாமமென்பதன் திரிபென்பதே துணிபு. இஃது உண்மை கூறலென்னும் உத்தியாம். மற்றும் 'செந்தமிழ்' தொகுதி ௬ பகுதி க-ல் தமிழ்ச்சொல் விளக்கத்தா லுணர்க.

தமிழ்ப் பெருமை

தமிழ் உலகத்து முதல் முதலுண்டாய இயற்கை மொழியாக உள்ளது; சிறுசிறு சொற்களையுடையது; நோய்கொண்டோர், பூப்புற்றோர், சிறுவர் முதலோர்க்கும் உச்சரித்தற்கு எளிமையானது; கன்னடம் தெலுங்கு முதலிய பலபல பாஷைகளுக்கும்

முதன் மொழியாகவுள்ளது; வேதங்களுக்கு நெடிதுகால முற் பட்டது; சிவன் திருமால் முதலோரும் பேசும் பெருமையுடை யது; ஏகாட்சர மந்திர முதலியவற்றாற் சிறந்தது.

தனக்குமேலொரு பாழையுமில்லாதது; ஆரியத்தோ டொருப்பட்டது; யோக மொழியாகவுள்ளது; காரணச் சொற்க ளேயே தனக்கு உரிமையாகக் கொண்டுள்ளது; இமயகூட முதலிய சத்தகூடங்களிலும் வளர்ச்சி பெற்றுள்ளது; சுருங்கக் கூறலென் னும் அழகில் விரிந்தபொருட் பொதிவுடையது; மனதின் தோற் றங்களை வெளியிடுவதற்கு நுணுக்கமாகவும் தத்துவ வகையாக வும் அமைந்த சொற்பொலிவுடையது; மனோபாவனைக்கேற்ற செப்பாகமும் தார்க்கிக வழக்குமுடையது; செவிக்கு இன்பந் தரும் வைதர்ப்ப நெறியாற் சிறந்தது; மனத்தின் தோற்றத் தைத் தெளிவாகக் கூறுவதற்கு ஏற்றவலிமையையும் தாற்பா லது; யாழுக்கமைந்த பண்ணின் அழகுடையது; ஆரியம் கிரீக்கு முதலியவற்றிலும் கலந்துளது; ஆரியத்துக்கு நெடிதுகால முற் பட்டது; அதற்குத் தாய்மொழியுமாம்; மற்றும் இதன் பெருமை கள் அளவில்லன.

தமிழாசிரியர்

விநாயகன் சிவபெருமான் முதலோர் பழந் தமிழாசிரிய ராவர்.

எழுத்து

அங்காத்தலும் அதன்பின் இதழ்குவித்தலும் மக்களுக்கு இயல்பாக வுண்டாதலின்; அங்காத்தலால் அகரமும் இதழ் குவித்தலால் உகரமும் பிறக்கும். அங்காந்து அங்காத்து பழகிய பின்னரே இதழ்குவி வுண்டாதலின் அகரத்தினின்றே உகரம் பிறந்ததாகும்.

அ	உ
அங்காப்பு	இதழ்குவிவு
இயற்கை	செயற்கை
ஆண்	பெண்

வெண்மை	செம்மை
ஓசை நிறைந்தது	ஓசை குறைந்தது
ஆற்றலுள்ளது	ஆற்றலில்லது

அ ஆ இ ஈ உ ஊ ஏ ஓ, க ங ச ஞ த ந ப ம ய ல வ என்பன பழந்தமிழெழுத்துக்களாம்.

எகர ஒகரங்கள் பிற்காலத்துண்டானவை. அகர இகர உகரங்களினீட்டமே ஆகார ஈகார ஊகாரங்களாதல் போல எகர ஒகரங்களினீட்டம் ஏகார ஓகாரங்களாகா. மற்று என்னெனின் ஏகார ஓகாரங்களின் குறுக்கமே எகர ஒகரங்களாகும். பாளியும் ஆரியமும் பழந்தமிழினின்று பிரிந்தமையால் அப்பாளியிலும் ஆரியத்திலும் எகர ஒகரங்களில்லவாயின. சாமவேதத்தில் சாத்ய முக்ரிராணுயநாசாகையில் எகர ஒகரங்கள் உள்ளன என்பர். பிற்காலத்துண்டாயின என்க.

"மெய்யினியற்கை புள்ளியொடுநிலையல்"

"எகர ஒகரத்தியற்கையுமற்றே" (தொல்—நூன்மரபு)

எனத் தொல்காப்பியர் அகர இகர உகரங்களின் வேறுபடுத்தி எகர ஒகரங்கள் மெய்போலப் புள்ளி பெறு மென்றலின் அவை பிற்காலத்துண்டாயின என்பது துணிபு. ஐகார ஔகாரங்களும் பிற்காலத் துண்டானவையே. பாளியில் ஐகார ஔகாரங்களில்லாமையால் பழந்தமிழில் ஐகார ஔகாரங்களிருந்த காலத்தே அப்பழந்தமிழினின்று பாளிபிரிந்த தெனவும், ஆரியத்தில் ஐகார ஔகாரங்களுண்மையின் பழந் தமிழின் பிற்காலத்தில் ஐகார ஔகாரங்களுண்டாயின பின் ஆரியம் பிரிந்த தெனவும் கொள்ளப்படும்.

ஐகார ஔகாரங்களுண்டாயின பின்னரே எகர ஒகரங்களுண்டாயின, செந்தமிழின் தொடக்கத்தில் அவையுண்டாயிருக்கலாம்.

உயிர்ச்சந்தி யெழுத்து

எ ஏ ஐ ஔ இந்நான்கும் உயிர்ச்சந்தி யெழுத்துகளாம்.

அ + இ = ஏ அ + உ = ஓ
அ ய் இ = ஐ. அ வ் உ = ஔ

லகர ரகரங்கள் செயற்கை யெழுத்து, ளகர ழகரங்களும் அன்ன. ஆரிய வியாகரணத்தில் லகரமொன்றுமே கூறியதன்றி ளகரம் கூறாமையால் லகரமொன்றையே யுடைய பழந்தமிழி னின்று ஆரியம் பிரிந்ததென்பது தேற்றமாகின்றது. பழந் தமிழின் அடுத்த பிரிவு கிரந்தமாயினும் ஒற்றுமை பற்றி ஆரிய மெனப்பட்டது.

கந்தம்—க்ரந்தம்—கிரந்தமாயிற்று. கந்தம்=இசை. தெலுங் கர் கந்தபத்தியமென்பர். கந்தம் இசையை புணர்த்தும் சந்த மென்பதன் திரிபு. சகரம் ககரமாகும். முதல் முதலுண்டா யது இசைக்கல்வி யாகலின் கந்தமென்னும் பெயராற் கூறினர். இஃது உண்மை கூறலென்னு முத்தி.

மெய்ச்சந்தி யெழுத்து.

ட ண ற ன இந்நான்கும் மெய்ச்சந்தி யெழுத்துக்களாம்.

ள்+த=ட ள்+ந=ண
ல்+த=ற ல்+ந=ன

சந்தியெழுத்தெனினும் செயற்கை யெழுத்தெனினும் ஒக்கும். இவை பிற்காலத்துண்டாயின.

மாகறல் பொன்னுசாமி முதலியார்.

இலக்கண விளக்க வுரை

செந்தமிழ்ச் செல்வியின் சிலம்பு ௨, பரல்கள் ௩, சல் பண்டிதர் ஸ்ரீமாந் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் 'இலக்கண விளக்க வுரையாளர் யார்?' என்னுந் தலைப்பு இட்டு எழுதிய கட்டுரையில், உரையாளர் நூலாசிரியரைப் படர்க்கை யிற் கூறுதலானும் நூலாசிரியர் கருத்தில் தமக்குளதாகிய ஐயுறவு தோன்றக் கூறுதலானும் இலக்கண விளக்க வுரையாளர் நூலாசிரிய ரல்லரென முடிவு கட்டினார்கள்.

அச்செல்வியின் சிலம்பு ௨, பரல்கள் ௫, ௯-ல் நான் 'இலக்கண விளக்கவுரையாளர் நூலாசிரியரே' என்னுந் தலைப்பு இட்டு எழுதிய கட்டுரையில், இலக்கண விளக்கச் சூத்திரங்கள் பெரும்பாலும் நன்னூல் தொல்காப்பியம் முதலியவற்றினின்று எடுக்கப்பட்டும் இலக்கண விளக்கவுரை பெரும்பாலும் மயிலைநாதர் இளம்பூரணர் சேனாவரையர் நச்சினார்க்கினியர் முதலியோருரைகளினின்று எடுக்கப்பட்டும் வைத்தியநாத நாவலரால் அமைத்துக் கொள்ளப்பட்டனவென்றும், இவ்வுண்மை இலக்கண விளக்கப்பாயிரத்து 'முன்னோர் நூலின் முடிபு நோக்கிச், சொல்லும் பொருளுந் தொல்வன தழீஇ' எனவருதலானும் அதனுரை 'முன்னோர் கூறிய நூல்களினுடைய முடிபினை ஐயந்திரிபற ஆராய்ந்து அவரோதிய சூத்திரத்துள்ளும் பொருளுள்ளும் ஈண்டைக்குப் பொருந்துவனவற்றை அணைத்துக்கொண்டு' என வருதலானும் அறியப்படுமென்றும், உரையாளர் நூலாசிரியர் கருத்தில் ஐயுறவு தோன்றக் கூறுகின்றாரென்பதற்கு நாட்டாரவர்கள் எடுத்துக் காட்டிய இலக்கண விளக்கவுரைப் பகுதியும் அதற்கு மூலமாகிய இலக்கண விளக்கச் சூத்திரப்பகுதியும் முறையே இளம்பூரணருரைப்பகுதியும் அதற்கு மூலமாகிய தொல்காப்பியச் சூத்திரப்பகுதியுமாயிருத்தலின் அது வழக்கு வலியற்று நிற்கின்றதென்றும், பண்டையுரையாசிரியர் கூற்றுக்களை அவ்வாறே எடுத்தமைப்பவரொருவர் தம்முரைக்கூற்றை இடையிடுங்கால் படர்க்கையிற் கூறிச் செல்லுதலே உரைநடைத் தொடர்ச்சிக்கு ஏற்றதாகலின் வைத்தியநாத நாவலர் தம்மைத் தன்மையினன்றிப் படர்க்கையிற் கூறினாரென்றும் கூறி, இக்காரணங்களால் நாட்டாரவர்களது புதிய ஆராய்ச்சி முடிவு சான்றுகளால் ஆதரிக்கப்பட்டிலதென்றும் ஈசான தேசிகரும் சிவஞான சுவாமிகளுங் கூறுவன சான்றுகளால் ஆதரிக்கப்படுகின்றனவென்றும் எழுதினேன்.

இதன் பின்பு அச்செல்வியின் சிலம்பு ௨, பரல் ௭-ல் நாட்டாரவர்கள் நான் கூறியவற்றிற்கு மறுப்பாக ஒரு கட்டுரையெழுதினார்கள். அக்கட்டுரையால் நான் கூறிய காரணங்கள்

பேதிக்கப் படவில்லை யென்று நான் கருதினமையால், மேலும் மேலும் வீண்வாதந் தொடுக்க மனமின்றி வாளா இருந்தேன்.

பின்னர் அச் செல்வியின் சிலம்பு உ, பரல் அ-ல் இலங்கை ஸ்ரீமாந் ஆ. ஆறுமுகம்பிள்ளை யென்பவர்கள் 'இலக்கண விளக்கவுரைச் சமாதானம்' என்னுந் தலைப்பு இட்டு எழுதிய கட்டுரையில் நான் காட்டிய காரணங்களுக்கு மறுப்பாகக் கருதிப் பலவிஷயங்கள் கூறியிருக்கின்றார்கள். அவற்றுள் எடுத்துக் கொண்ட விஷயத்திற்குப் பொருத்தமானதென்று நான் கருதிச் சமாதானம் எழுதவேண்டியதாகக் கிடப்பது ஒன்றே. அஃதாவது:—

மேலும் வேறுமோரிடத்தில் உரையாசிரியர் "இங்ஙனம் வரவே கருவி கருத்தா வென வேறு கூறவேண்டாவெனினும் அது மிகுந்து காட்டலின் வேறு கூறினார் போலும்" (இ. வி. ௱எ௫ ம் பக்) எனப்பின்னும் ஐயுறவு தோன்றக் கூறினார்.

என அவர்கள் கூறியதே.

ஆசிரியர் தோல்காப்பியனார் மூன்றும் வேற்றுமையும் அதன் பொருளுங் கூறும் வழி

'மூன்றா குவதே
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதல் கருவி யனைமுதற் றதுவே.'

(தொல். சொல். வேற்றுமையியல். ௰௨)

யென மூன்றும் வேற்றுமைக்கு வினைமுதலுங் கருவியுமாகிய இரு பொருள்கள் கூறினார். ஆனால் பவணந்தி முனிவர் நன்னூலில்

'மூன்றா வதனுரு பாலா னோடொடு
கருவி கருத்தா வுடனிகழ் வதன் பொருள்'

(சொல். பெயரியல். ௪௰.)

என மூன்றும் வேற்றுமைக்குக் கருவி கருத்தா உடனிகழ்வாகி மூன்று பொருள்கள் கூறினார். இந் நன்னூற் சூத்திரத்தையே

வைத்தியநாத நாவலர் இலக்கணவிளக்கத்து அமைத்துக்கொண்டு உரை கூறுகின்றார். ஆகவே வைத்தியநாத நாவலராகிய உரையாளர், தொல்காப்பியர் கொண்ட இரு பொருள்களோடு நன்னூலார் உடனிகழ்வு கூறியதற்குக் காரணத்தை ஆராய்ச்சி செய்து 'இங்ஙனம் வரவே, கருவி, கருத்தா எனவே அடங்குதலின் உடனிகழ்வென வேறு கூறவேண்டாவெனினும், அது மிகுந்து காட்டலின் வேறு கூறினர் போலுமென்பது' என நன்னூலார் கருத்தில் தமக்கு ஐயுறவு தோன்றக் கூறினரென்பதே பெறப்பட்டதாகும்.

இலங்கைப் பிள்ளையவர்கள் நன்னூல் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களிலிருந்து இலக்கண விளக்கத்தில் எடுத்தாளப்படாத சூத்திரத்தின் உரைப்பகுதியில், உரையாளர் நூலாசிரியர் கருத்தில் ஐயுறவு தோன்றக் கூறுதலை எடுத்துக் காட்டுவதாயின் அவ்வழக்கு வலியுடையதாகும். அவ்வாறில்லாத இந்நிலையில் இலங்கைப் பிள்ளையவர்கள் காட்டியதும் வழக்கு வலியற்றொழிந்ததாகின்றது.

மற்றும் அப்பிள்ளையவர்கள் சிவஞானசுவாமிகள் எற்பாட்டிற்கு நாள் வெயிற்காலையென்று பொருள் கொண்டமை சங்கப் புலவர்கள் கருத்துக்கு மாறுபட்டதாகக் கூறினமை தனித்த ஆராய்ச்சியாக வைத்துப் பின்னர் ஆராயப்படும்.

திருநெல்வேலி. }
௰௩, ௨, ௭௱௨. }

வி. சிதம்பர ராமலிங்கபிள்ளை.

ஓர் அறிவிப்பு

'செந்தமிழ்ச் செல்வி'யின் சிலம்பு, 2-ல் 'இலக்கணவிளக்கவுரையாளர் யார்?' என்னுந் தலைப்பின்கீழ் யான் எழுதிய கட்டுரையினையும், பிறர் அதற்கெழுதிய மறுப்புரையினையும், அதனை மறுத்து என் கொள்கையை நிறுவுதற்குப் பின் யான் எழுதியதனையும், என் கொள்கையை ஆதரித்துப் பின்னும் ஒருவர் எழுதி

யதனையும் தமிழன்பர் பலர் படித்தறிந்திருப்பர். என் கொள்கை வழுவில்லாத தென்பதனை நான் கூடியவரையில் விளக்கிக் காட்டியிருக்கின்றேன். ஆனால் என் கொள்கையினை யாவரும் ஒத்துக்கொள்ள வேண்டுமென நான் நினைத்தவனல்லேன். ஆராய்ச்சி செய்து கொள்ளுவார் கொள்க. தள்ளுவார் தள்ளுக. யான் இது குறித்துப் பின்னும் எழுதுமாறில்லை.

பண்டிதர், மு. வேங்கடசாமி நாட்டார்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக அமைச்சர் காலஞ்சென்ற திருவாளர் மா. திரவியம் பிள்ளையவர்களின் வாழ்க்கை வரலாறு

திருநெல்வேலி ஜில்லாவில் பொதிய வரையின் சாரலிலே சிங்கம் பட்டி ஜமீனைச் சார்ந்த ஏறுமாபுரத்திலே சைவ வேளாளர் குலத்திலே மாணிக்கவாசகம் பிள்ளையவர்கட்கும், லெட்சுமியம் மாளுக்கும் திருக்குமாரராக நமது பிள்ளையவர்கள் 1868 ம் வரு பிறந்தார்கள். இவர்களுக்குப் பிதா அக்காலத்திலே கிராமப் பிள்ளைகளுக்கு ஏற்படும் சாதாரணக் கல்வியோடு சிறிது ஆங்கில மும் கற்பித்து வரலாயினர். ஆயினும் நமது பிள்ளையவர்கள் மதிநுட்பம் வாய்ந்தவர்களா யிருந்தமையின் அச்சாதாரணக் கல்விதானும் மிகுந்த விளக்கமடையலாயிற்று. அதனால் 'அறிவுடை யொருவனை யரசனும் விரும்பும்' என்பதற்கேற்ப, இவர்கள் தமது பதினைந்தாவது வயதில் சிங்கம் பட்டி ஜமீனில் ஒரு உத்தியோகத்தில் நியமிக்கப் பெற்றனர்.

இவ்விதம் இவர்கள் இளமையிலே மிகுந்த பொறுப்புடைய ஜமீன் வேலையைத் திறமையுடன் செய்து வரும் ஆற்றலைத் தெரிந்து, மேற் குறித்த ஜமீன் மானேஜராய் அக்காலத்திருந்த திருநெல்வேலி வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ T. S. சுப்பிரமணி பிள்ளையவர்கள் ஜமீன் தொடர்புடைய வழக்குக்களைக் கொண்டு நடத்துவதற்கு இவர்களைத் தமது குமாஸ்தாவாக அமைத்துக் கொண்டனர். அப்பொழுது இவர்களுக்கு வயது 18. நமது பிள்ளை

யவர்கள் தமக்கு ஏற்பட்ட தொழிலேயன்றி ஷை ஜமீன் மானேஜ ரவர்களது சொந்தக்காரியங்களையும் மிக்க திறமையுடன் செய்து வந்தனர். இவர்கள் மகா-ா-ா-ஸ்ரீ வக்கீல் பிள்ளையவர்களிடம் வரும் கட்சிக்காரர்களுக்கு வழக்கின் வன்மை மென்மைகளை யெடுத்துக்கூறி இருகட்சியாரையும் ஒற்றுமைப் படுத்துவதே தமது கடமையெனக் கொண்டு அவ்வாறே செய்து வந்தார்கள். சுருங்கக்கூறின் இவர்கள் மானேஜரவர்களுக்கு ஓர் மந்திரி நிலை மையிலிருந்து வந்தார்களென்று கூறுதலே அமைவுடையது. இவ்வாறு இவர்கள் தமது நாற்பதாவது வயதுவரை யிருந்து வந்தார்கள்.

இதற்கிடையில் திருநெல்வேலி இந்து கலாசாலைத் தலை மைத் தமிழ்ப் போதகாசிரியராயிருந்த மகா-ா-ா-ஸ்ரீ தி. பா. சிவராமபிள்ளையவர்கள் சிவபுர மென்று பெரியோர்புகழும் திரு நெல்வேலியில் சமயவளர்ச்சி கருதிய பத்திரிகையில்லாக் குறை யை நீக்கக் கருதித் 'திருநாவுக்கரசு' என்னும் பத்திரிகையைத் தொடங்கினார்கள். அப்பொழுது இவர்களே அவர்களுக்கு ஊற்றங்கோலாயிருந்து ஊக்கமளித்து பத்திரிகையை வெளியிட்டு வந்தார்கள். நமது பிள்ளையவர்களுக்கு இயல்பாகவேயுள்ள சைவப்பற்று இக்காலத்திலேதான் பலர்க்கும் வெளிப்பட்டது. இவர்கள் தமக்குச் சிறிது ஓழிவுநேரம் கிடைக்குமாயின் அப் பொழுதில் இவர்கள் ஷை சிவராம பிள்ளையவர்களுடன் சமய சம்பந்தமான ஆராய்ச்சியே செய்து வருவாராயினர்.

இங்ஙனமிருக்கும் நாட்களில் மறு முறையும் ஜமீன் வேலை இவர்களைப் பின் தொடரலாயிற்று. சிங்கம் பட்டி ஜமீனுக்குத் தகுதியுள்ள 'சிரஸ்ததார்' ஒருவர் வேண்டுவது இன்றியமையாத தாயிற்று. இயற்கை யறிவும், திறமையும், உண்மையும், உழைப்பு முடையவர்களை யார்தாம் விரும்பார். ஜமீன்தாரவர்கள் அவ்வுத் தியோகத்திற்குத் தகுதியுடையவர் நமது பிள்ளையவர்களே யென்று தெரிந்து இவர்களை அவ்வுத்தியோகத்தில் நியமனஞ் செய்தனர். இவ்விதம் 1908 ம் ஹூ முதல் 1911 ம் ஹூ வரை அவ்வுத்தியோகத்தை இவர்கள் நன்கு பார்த்து வந்தார்கள்.

இதன் பின்பு திருநெல்வேலியில் ஹெட் மானேஜராயிருந்த மகா-௱-௱-ஸ்ரீ T. S. சுப்பிரமணிய பிள்ளையவர்களும் திருநெல்வேலி வக்கீல் மகா-௱-ஸ்ரீ P. M. கைலாசம்பிள்ளையவர்களும் பொதுஜன நன்மையை யுத்தேசித்து கே. யஸ். பாங்கு என்னும் பெயரால் ஒரு நிதி திறக்க விரும்பினர். அதற்கு மானேஜராகவும் நமது பிள்ளையவர்கள் யிருந்தார்கள்.

இவ்வளவேயன்றி மேற்கூறிய இரு நியாயவாதிகளும் காடுபட்டி யென்னும் கிராம மொன்றை வாங்கினார்கள். அதனை அப்பொழுதிருந்த நிலையிற் சீர்திருத்துதல் நமது பிள்ளையவர்கள் தவிர வேறு யாவராலும் இயலாததொன்று. இதனை நன்குணர்ந்த அவ்விருவர்களும் இவர்களிடமே அதன் பொறுப்பை ஒப்புவித்து இவர்கட்கு அக்கிராமத்தில் அரைக்காற் பங்கும் கொடுத்து ஊக்கினார்கள்.

நமது பிள்ளையவர்கள் இவ்வாறெல்லாம் நடந்து கொண்டு வந்தார்களாயினும் 'தாதியிருகை வீசிவந்தாலும் அவள் மனம் நீர்க்குடத்தே தான்' என்று கூறும் பழமொழிக் கேற்பச் சைவ சித்தாந்த வளர்ச்சி கருதி ஒரு கழகம் நிலையிடல் வேண்டு மென்றும் அது பல பங்காளிகளை யுடையதாய்ப் பொதுமக்கட் பாதுகாப்புக் குட்பட்டிருத்தல் வேண்டுமென்றும் அதன் வாயிலாகச் சிறந்த சைவ நூல்களையும் தமிழ் நூல்களையும் பலர்க்கும் பயன்படுமாறு அச்சிட்டு வெளியிடல் வேண்டு மென்றும் பலகாலமும் சிந்தித்துத் திருவருளைப் பிரார்த்தித்துவந்தார்கள். அதன் பயன் விளையுங்காலமும் அணுகிற்று. இவர்கள் 1920-ம் ஹூ சிங்கம்பட்டி ஜமீன் சார்புள்ள ஓர்வழக்கை முன்னிட்டுச் சென்னபட்டணம் சென்றிருந்தார்கள். அப்பொழுது சென்னைப் பவளக்காரத் தெருவில், இப்பொழுது சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் மற்றோரமைச்சராயிருக்கும் திருவாளர் வ. திருவரங்கம் பிள்ளையவர்கள் திருசங்கர் கம்பெனி யென்னும் பெயரால் ஒரு நூல் நிலையம் ஏற்படுத்திப் பலநூல்களை அச்சிட்டு வெளியிட்டுக் கொண்டிருந்தார்கள். இது தெரிந்த நமது பிள்ளையவர்கள் அவர்களைச் சந்தித்துப் பேசி அவர்களுடைய சமயப் பற்றும்

மொழிப்பற்றும் தெரிந்து அவர்கள் தம்மோடு உழைத்துவரின் சைவத்திற்கும் தமிழிற்கும் உண்மையான தொண்டு செய்யதாக முடியுமென்று கூறினார்கள். திருவாளர் வ. திருவரங்கம் பிள்ளையவர்கள் அதற்கிணங்கவே அன்று நன்னாளாயிருந்தமையின் 'சுபஸ்யசீக்ரம்' என்று வடமொழியிற் கூறுதற்கேற்ப அன்றுதானே சென்னையில் வைத்துச் சென்னைச் சட்டகலாசாலைப் பேராசிரியராயிருக்கும் திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்களையும் கலந்து கழகத்திற்கு வேண்டப்படும் Memorandum, Article of Association முதலியனவும் சித்தஞ் செய்தார்கள். இக்கழகந்தான் 'திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்' என்னும் பெயரால் இப்பொழுது திகழ்வது. இக்கழகம் கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் சைவசமயச் சார்பான நூல்களும் தமிழ்ச் சார்பான நூல்களுமாக நாற்பது நூல்களைத் தமிழ்மக்கட்கு உதவியிருக்கிறது. அன்றியும் 'செந்தமிழ்ச் செல்வி' யென்னும் திங்கள் வெளியீட்டு வாயிலாய்ப் பல அரிய கட்டுரைகளையும் இக்கழகம் வெளியிட்டிருக்கிறது. இக்கழகச் சார்பாய்த் திருநெல்வேலியில் 'சைவசித்தாந்த சங்கம்' ஒன்று நிலையிடப் பெற்று அதுவும் நடைபெற்று வருகின்றது. இவ்விதம் தமிழ் நாட்டில் சிறந்த கழகம் அமைக்கவேண்டுமாயின் அதற்காக உழைத்து வருபவர்கள் எத்துணைத் தன்னலம் பாராட்டாத் தன்மையும் பெருந்தன்மையும் ஊக்கமும் உழைப்பும் உறுதியுமுடையவர்களாயிருத்தல் வேண்டு மென்பது நாமே உணர்ந்தறியற்பாலது.

இவ்வாறு இவர்கள் செய்த முயற்சி இவர்களது வாழ்நாளாகிய மரத்தில் பழுத்த கனியே யென்று கூறலாம். இதன் சுவையினை இவர்கள் சென்ற நான்கு ஆண்டுகளே நுகர்ந்தார்கள். பல பொதுக் காரியங்களிலும் இவர்கள் தலையிட்டு உழைத்து வந்ததன் காரியமாக இவர்களது உடனிலை வரவரக் குறையலாயிற்று. மருத்து நூலோர் பலவாறு முயன்றனர். ஆயினுமென்! விதியினைக்கடந்தார் யாரே! 1100 ம் ௵ ஆவணிமீ 24உ செவ்வாய்க்கிழமை காலை 6-30 மணிக்குச் சைவசித்தாந்தத்திற் கூறப்படும் முப்பொருள்களாகிய இறை உயிர் மலம் என்னும் மூன்

றன் என்றுமுள்ள தன்மையை எடுத்துக் கூறியவாறே இப் பெரியார் இறைவன்றிருவடி யெய்தினர். நண்பர்களும் உற்று ரும் இரங்கினர். ஆவதென் !

பொது நன்மைக்காக உழைத்துச் சைவத்திற் கென்றே பாடுபட்ட அவர்களது உயிர் சார்ந்த நிலையை மறுமையிலடையு மாறு எல்லாம் வல்ல இறைவன் திருவடியை வழுத்துதலே நாம் செய்யவேண்டிய கடமையாகும்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்,

திருநெல்வேலி.

திருவாசக வாக்கியங்கள்

முன்னோர் மொழியைப் பொன்னேபோற் போற்றுக என ஆன்றோர் கூறிய வண்ணம் ஸ்ரீ மணிவாசகப் பெருமான் திரு வாய் மலர்ந்தருளிய திருவாசகத்தினின்றும் நாம் அடிக்கடி கையாளக் கூடிய வாக்கியங்களை ஓரிடத்தே தொகுத்தல் நன்றெ னக் கருதி அவைதமை அங்ஙனே ஈண்டெழுதலாயினேம். சபை தனிற் பேசும் போதும், செய்யுள் முதலிய இயற்றும் போதும், பின்னும் வேண்டும் சமயத்தும் இத்தகைய தொகுதி பெரிதும் பயன்படும்.

[1. சிவபுராணம்]

‘ அவனருளாலே யவன்றாள் வணங்கி ’
‘ எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான் ’
‘ கறந்த பால் கன்னலொடு தேன் கலந்தாற் போல ’
‘ தாயிற் சிறந்த தயாவான தத்துவனே ’
‘ இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே ’
‘ நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே ’
‘ கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே ’

[2. கீர்த்தித்திருவகவல்]

‘ எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்
தானே யாகிய தயாபர னெம்மிறை ’

[3. திருவண்டப் பகுதி]

‘ சொற்பதங் கடந்த தொல்லோன் ’
‘ இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந் திரத்தி னவ்வயி னொளித்து ’
‘ தடக்கையி னெல்லிக் கனியெனக் காயினன் ’

[4. போற்றித் திருவகவல்]

‘ யானை முதலா எறும்பீறாய ’
‘ ஈர்க்கிடை போகா இளமுலை ’
‘ தெய்வ மென்பதோர் சித்த முண்டாகி ’
‘ நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர் ’
‘ தழலது கண்ட மெழுகது போல ’
‘ கொடிறும் பேதையுங் கொண்டது விடாது ’
‘ பசுமரத் தாணி யறைந்தாற் போல’
‘ நாணது வொழிந்து நாடலர் பழித்துரை பூணதுவாக ’
‘ தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி’
‘ தோளா முத்தச் சுடரே’

[5. திருச்சதகம்]

‘ கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
‘ நாடகத்தா லுன்னடியார் போனடித்து ’
‘ யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்
‘ பள்ளந்தாழ் முறுபுனலிற் ’
‘ உள்ளந்தான் நின்று உச்சியளவும் ’
‘ இரும்பின் பாவை யனைய நான் ’
‘ நாயினுக்குத் தவிசிட்டு ’
‘ யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம் ’

‘ கண்டுங் கண்டிலேன் என்ன கண்மாயமே’
‘ என்னு மெண்ணையும் போனின்ற எந்தையே ’
‘ பட்டி மண்டப மேற்றினை யேற்றினை
எட்டி ஞெடிரண் டும்மறி யேனையே ’
‘ கண்கெட்ட ஊரேறையிங் குழல்வேனே ’
‘ பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியார் கடமை ’
‘ போகம் வேண்டி வேண்டிலேன் புரந்தராதி யின்பமும் ’
‘ இருப்பு நெஞ்ச வஞ்சனேன் ’ *
‘ ஊரா மிலேக்கக் குரட்டா மிலேத்து ’
‘ திணியார் மூங்கி லனையேன் ’
‘ யானேபொய் யென்னெஞ்சும்பொய் யென்னன்பும்பொய் ’
‘ அழுதாலுன்னைப் பெறலாமே ’
‘ கையிலங்கு பொற்கிண்ணம்.’
‘ கல்லை மென்கனி யாக்கும் விச்சை ’
‘ விச்சதன்றியே விளைவு செய்குவாய் ’
‘ தாம்வளர்த்ததோர் நச்சுமாமர மாயினுங் கொலார் ’
‘ தொழும்பாளர் எய்ப்பினில் வைப்பனே ’

[6. நீத்தல் விண்ணப்பம்]

‘ ஐம்புலன் ஆற்றங் கரைமரமாய் வேராறுவேன் ’
‘ தீப்புகு விட்டிலில் ’
‘ பொறுப்பரன்றே பெரியோர் சிறுநாய்கள்தம் பொய்யினை
யே ’
‘ இருதலைக் கொள்ளியி னுள்ளெறும்பொத்து ’
‘ விரிதலையேன் ’
‘ கடலினுள் நாய்நக்கி யாங்கு ’
‘ வெள்ளத்துள் நாவற்றி யாங்கு ’
‘ என்னை யாண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை ’
‘ கொம்பரில்லாக் கொடிபோல் அலமந்தனன் ’
‘ ஆனைவெம் போரிற் குறுந்தூறு எனப் புலனால் அலைப்புண்
டேன்’
‘ புலனின்கட் போத வொட்டா மெள்ளனவே
மொய்க்கு நெய்க்குடந் தன்னை யெறும்பெனவே ’
எறும்பிடை நாங்கூழெனப் புலனால் அரிப்புண்டு ’

'மத்துறு தண்தயிரில்'
'வாழைப் பழத்தின் மனங்கனிவித்து'
'தருக்கித் தலையானடந்த வினைத்துணையேன்'
'கொங்கைப் பலாப்பழத் தீயினொப்பாய் விழைதருவேன்'

(தொடரும்)

வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A.

---

*விழாவறைதல்

நிலைமண்டில வாசிரியப்பா

உலகீர் கேண்மின் உலகீர் கேண்மின்
திருவா சகமெனும் பெருவா சகமதை
ஓதிய நங்கள் வாதவூர் முனிவர்
பொன்னம் பலவிறை தன்னொடு கலந்த
திருநாள் வந்தது திருநாள் வந்தது
வரமிகு தாரா புரமதைச் சார்மின்
வைகறை எழுமின் வைகறை எழுமின்
உத்தம மான நித்திய கன்மம்
புரிமின் நெறியே புரிமின் நெறியே
தூய்ய வெண்ணீறு மெய்ம்முழு தணிமின்
ஒண்டிகழ் மேன்மைக் கண்டிகை பூண்மின்
நேசமுடன் திரு வாசக மோதுமின்
முன்றில்க டோறும் முன்றில்க டோறும்
பழமணல் நீக்குமின் பரப்புமின் புதுமணல்
தெருவெலாம் பனிநீர் தெளிமின் தெளிமின்
பந்தர்கள் இடுமின் பந்தர்கள் இடுமின்

---

* இது தாராபுரம் ஸ்ரீ மாணிக்க வாசகசங்கத்தில் நடைபெறும் மாணிக்க வாசகர் குருபூசைத் திருவிழாவின் பொருட்டு இயற்றப் பட்டது.

தோரணம் திகழத் தூக்குமின் தூக்குமின்
பூரணகும்பம் பொலிவுற எடுமின்
வரிசை வரிசையா மாலைகள் நாட்டுமின்
தெற்றிக டோறும் திருவிளக் கேற்றுமின்
பாவை விளக்குப் பண்புற வைம்மின்
வானுல கேத்தும் மணிவாசகர் அருட்
சங்கம் சார்மின் சங்கம் சார்மின்
ஆளுடை அடிகள் அடிமலர் இணையே
சிந்தையிற் கொண்மின் சிந்தையிற் கொண்மின்
திருவார் அவர்புகழ் பெருகா தரமுடன்
வாய்மலர்ந் துரைமின் வாய்மலர்ந் துரைமின்
உடலெலாம் புழுதி படஅவர் அடியில்
வீழ்ந்து வணங்குமின் வீழ்ந்து வணங்குமின்
அலகிலா நறுமண மலர்பல தூவி
அருச்சனை புரிமின் அருச்சனை புரிமின்
மாகே சுரரை வாழ்த்துமின் நன்றே
முறை பெற அவர்க்கு நிறைதரு பூசை
அன்புடன் புரிமின் அன்புடன் புரிமின்
அன்னவர் தங்கட் கறுசுவை சேர்ந்த
அன்னம் படைத்தே அகமகிழ்ந் தூட்டுமின்
வேண்டுவ நல்குமின் வேண்டுவ நல்குமின்
சமய தீக்கிதர் சார்குவிர் ஒருசார்
விசேட தீக்கிதர் மேவுவிர் ஒருசார்
மற்றைய தீக்கிதர் மருவுவிர் ஒருசார்
ஆசாரியர்கள் அடைகுவிர் ஒருசார்
பிரம சரியம் பேணினர் ஒருசார்
இல்லற மேவும் இயல்பினர் ஒருசார்
வானப் பிரஸ்த மாண்பினர் ஒருசார்
சந்நியா சங்கொள் தவத்தினர் ஒருசார்
அடைமின் மகிழ்வுடன் அடைமின் மகிழ்வுடன்
வேதத் துணிபை விளக்குமின் ஒருசார்
ஆகமத் துணிபை அறைமின் ஒருசார்

புராண இயல்பைப் புகலுமின் ஒருசார்
இதிகா சத்தை இயம்புமின் ஒருசார்
சரியைமார்க் கத்தைச் சாற்றுமின் ஒருசார்
கிரியைமார்க் கத்தைக் கிளத்துமின் ஒருசார்
யோகமார்க் கத்தை உணர்த்துமின் ஒருசார்
ஞானமார்க்கத்தை நாட்டுமின் ஒருசார்
செருக்கில ராகிச் சினமில ராகித்
தருக்கம் பேசுமின் தருக்கம் பேசுமின்
புறச்சம யங்களின் பொய்ம்மையை விளக்குமின்
சைவப் பெருமையைச் சாற்றுமின் சாற்றுமின்
பிரசங்க மேடையிற் பெரிதுவந் தேறி
பிள்ளையும் பேதையும் பேணி யுணர்தரப்
பிரசங்கம் புரிமின் பிரசங்கம் புரிமின்
வாசகர் பவனி வருகிற காலை
வேதியர் நாத வேத மோதுமின்
திருமுறை புகல்வோர் திருமுறை புகலுமின்
கீதம் பாடுவோர் கீதம் பாடுமின்
இன்னிய முழக்குவோர் இன்னிய முழக்குமின்
குடைபிடிப் போர்கள் குடைபல பிடிமின்
கொடிபிடிப் போர்கள் கொடிபல பிடிமின்
நாட்டியம் அறிவோர் நாட்டியம் புரிமின்
வாழ்த்தெடுப் போர்கள் வாழ்த்தெடுத் துரைமின்
ஹரஹர சிவசிவ ஹரஹர சிவசிவ
எனவே துதிமின் இனிதே துதிமின்
திருவிழா இதனைச் சிறப்புடன் நடாத்தி
ஆளுடை யடிகள் அருட்பெருஞ் செல்வம்
பெறுமின் இயல்பே பெறுமின் இயல்பே.

திருச்சிற்றம்பலம்

நா. ஆறுமுகம்,

தாராபுரம்.

Copy of Rev. H. A. Popley's Review of our Tirukkural, sent to the following papers :—

1. "THE GUARDIAN,"
2. "YOUNG MEN OF INDIA,"
3. "CHRISTIAN PATRIOT,"
4. "UNITED CHURCH HERALD."

Dear Sir,

I am taking the liberty of drawing the attention of the Tamil readers of your paper to a new edition of the Tirukkural which has just been published by the South India Saiva Siddhanta Society, Printing Society, Tinnevelly.

For the first time in the History of Tamil publishing has this immortal work been placed before the world in a form worthy of its position in the world of letters. This Society has done a very useful service indeed in bringing out this handsome and well printed edition.

It is published in two forms.

1. Special binding and printed on antique paper.
2. Cloth binding.

The former is priced at Rs. 1-8-0, the latter at As. 8. Both of them are beautifully printed with clear type, and as far as I have been able to see, are free from errors.

I would strongly urge all those who want a really well printed edition of the Kural to purchase one of these. I may say that neither of them contain notes, but simply the work itself, and both are of convenient size for the pocket.

Madura,
3rd Oct. '24.

Yours Faithfully,
(Sd.) H. A. POPLEY.

திருக்குறளைப்பற்றி திரு. பாப்ளி துரையவர்கள் பத்திரிகைகளுக்கு அனுப்பிய

மதிப்புரை

(மொழிபெயர்ப்பு)

பத்திராசிரியரவர்களுக்கு,

அன்புள்ள ஐயா,

திருநெல்வேலி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் சமீபத்தில் வெளியிடப்பட்ட திருக்குறளின் புதிய பதிப்பினைப் பற்றித் தங்களுடைய பத்திரிகையைப் படிக்கும் தமிழ் மக்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றனம்.

தமிழ் நூல்கள் பதிக்கப்பெறத் தொடங்கிய நாள்தொட்டு அழியாப் பெரும் புகழ் படைத்த அரிய நூலாகிய திருக்குறள் அதன் சிறப்பிற் கேற்ப அழகிய பதிப்பினைப் பெற்றுள்ள தென்பது இதுவே முதன் முறையாகும்.

திருத்தமான அச்சும், கண்கவர்வனப்பு மிக்க கையடக்கமான அளவில் இப்பதிப்பினைக் கொண்டு வந்ததால் இச் சைவ சித்தாந்தக் கழகம் உலகிற்கு உவந்ததொரு பெரிய நன்மையை விளைத்த தென்பது நன்கு போதரும்.

இக்கழகத்திலிருந்து வெளிவந்துள்ள திருக்குறள் இரண்டு பதிப்புக்களை யுடையது.

1. உயர்ந்த பதிப்பு: விலையுயர்ந்த ஆன்டிக் கடிதத்தில் (Antique Paper) பதிக்கப்பெற்று செப்பமான உயர்ந்த கட்டடமுடையது. விலை ரூ. 1 8

2. சாதாரணப்பதிப்பு: காலிகோ துணியினால் கட்டப்பட்டுள்ளது. விலை அணா. 0 8

இவை இரண்டும் அழகியதாகவும், திருத்தமாகவும் தூய்மையான அச்செழுத்துக்களில் பதிக்கப் பெற்றுள்ளன. யாம் படித்த அளவில் அச்சுப்பிழைகள் ஒன்றும் காணப்பெறவில்லை.

திருக்குறளில் அழகிய பதிப்பினை வாங்கவிரும்பும் ஒவ்வொருவரையும் இவையிரண்டு பதிப்புகளில் ஒன்றைக் கட்

டாயம் வாங்குதல் ஆவசியகமென வற்புறுத்திக் கேட்கின்றேம்.

இவை மூலமட்டு முடையன. உரை சேர்க்கப்படவில்லை. இவை பாக்கட்டில் வைப்பதற்குத் தகுதியான அளவுடையவை.

இம்மதிப்புரை அடியிற்காணும் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பெற்றுள்ளது.

1. கார்டியன்
2. இந்திய இளைஞர்கள்
3. கிறிஸ்டியன் பேட்ரியட்
4. யுனைடெட் சர்ச் ஹெரால்ட்

மதுரை
3—10—1924

அன்புள்ள,
H. A. பாப்ளி.

An Appreciation of Our Tirukkural

BY REV. H. A. POPLEY.

V. Subbiah Esq.,
South India Saiva Siddhanta Society,
306, Lingha Chetty Street, Madras.

Dear Sir,

I have your letter of the 26th September and I have received copies of the Tirukkural. I am very grateful indeed for them and appreciate the gift very much.

I have no hesitation whatever in saying that for the first time the Kural has been published in an edition worthy to compare with the editions of other great works similar to it. I have always been sorry to see the poverty-stricken fashion in which this great work has been printed and published. I am very delighted that your Society has taken up the matter in this way. A book like the Kural should certainly have a proper dress when it appears before the public.

You may certainly take it for granted that I shall do my utmost to see that this book is made widely known among all our people so that they may have the opportunity of purchasing this real worth while edition. I shall be very glad to get your Tiruvasagam when it comes out. I shall take both the books with me when I go to England for a few months next year and show them to friends there.

Santhapet, Madura,
3rd Oct. '24.

Yours Sincerely,
(Sd.) H. A. POPLEY,
District Secretary,
Young Men's Christian Association,
South India.

எமது திருக்குறளைப்பற்றி
திரு. பாப்ளி துரையவர்கள் கூறிய மதிப்புரை
(மொழிபெயர்ப்பு)

வ சுப்பையா பிள்ளை,
சைவசித்தாந்தக் கழகம்,
306, லிங்க செட்டி தெரு, சென்னை.

அன்புள்ள ஐயா,

தங்கள் 26-9-24 கடிதமும், திருக்குறள் பதிப்புக்களும் கிடைத்தன. அவற்றிற்காக மிகவும் நன்றியுடையேம். தங்களுடைய பரிசினை நன்கு மதிக்கின்றோம்.

திருக்குறளைப் போலுள்ள மற்ற அரிய நூல்களெல்லாம் விலை உயர்ந்த பதிப்புக்களில் வந்திருக்கின்றன. ஆனால் திருக்குறள் மட்டும் அவற்றிற் கொப்பான பதிப்புத்திறம் பெற்றுள்ளதென்பது இதுவே முதன் முறையாகும்.

தனது பெருமைக் கேற்ப இவ்வரும் பெருநூல் சிறந்த பதிப்பினை இதுவரை பெறாதிருந்ததைப் பற்றி நினைந்து யாம் அடிக்கடி வருந்தியதுண்டு. ஆனால் இக்குறையினை நீக்குவான்

கருதி தங்கள் கழகம் முன்வந்துள்ளது எமக்கு அளப்பிலா மகிழ்வை விளைவிக்கிறது. திருக்குறளைப் போன்ற ஒரு புத்தகம் அழகிய பதிப்பில் மக்களிடம் இருக்க வேண்டியது மிகவும் ஆவசியமாகும். திருக்குறளை இவ்வரிய பதிப்பிற் கிடைக்கப் பெற்றோமே இஃதல்லவோ நாம் பெற்ற பாக்கியம் என்று கருதும்படி யாவருக்கும் எம்மால் இயன்ற அளவு தெரிவிப்பேம் என்பதைத் தாங்கள் உறுதியாக நம்பலாம். தங்களுடைய திருவாசகப் பதிப்பு வெளி வந்ததும் அதனைப் பெற மிகவும் ஆசையுடையேம். அடுத்த ஆண்டு இங்கிலாந்துக்குப் போய் அங்கே சில மாதங்கள் தங்குவேம் அப்போது இவை இரண்டு புத்தகங்களையுங் கொண்டு போய் எம்முடைய நண்பர்கட் கெல்லாம் காட்டுவேம்.

மதுரை,
3-10-1924.

தங்கள் அன்புள்ள,
H. A. பாப்பிளி.

மதிப்புரை

பண்டைத் தமிழரசர்

இஃதியற்றவர் மதுரைக் காலேஜ் தலைமைத் தமிழாசிரியர் சு. ஸ்ரீநிவாசையங்காரவர்கள். பழந் தமிழ் நூல்களில் காணப்படும் சில புலவர்களின் வரலாறுகளை இயன்றவளவு விளக்குவது. தமிழ் மக்கள் யாவரும் கற்றுணரத்தக்க எளிய தமிழ் நடையுடையது. முன்னோர் வரலாறுகளைத் தெரிவதற்கு மக்கள் இயற்கையாகவே விரும்புவார்களாகலான் இந்நூல் தமிழுலகில் நல்வரவு பெறும் என்பதிற்றடையில்லை. இதன் பதிப்பாசிரியர் மதுரைத் திரு. இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன் அவர்களுக்கும் தமிழுலகு நன்றிபாராட்டக் கடப்பாடுடையது.

இதன் விலை அணா 10

கிடைக்குமிடம்:— இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

Printed at the Sivakami Vilasam Press, Published by V. Subbiah for the S. I. S. S. W. P. Soceity Ltd., 306, Linga Chetty St. Madras.